1969 மார்ச் 12] [திரு. ஜே. ஜேம்ஸ்]

The Speaker may disallow any supplementary question if in his opinion, it infringes the rules regarding questions or if a sufficient or reasonable number of supplementary questions has already been put in respect of the same question.

My point is, discretion is given to the Hon. Speaker only under Rule 38(1). Under Rule 38 (2), there is no discretion given for the Hon. Speaker. If sufficient or reasonable number of questions have been already put in respect of the same question. the Hon. Speaker may disallow any supplementary question, But here, for this particular question, no supplementary question has been permitted to be put. So I request the Hon. Speaker to allow Members to put supplementary questions for that question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்கும் நேரத்திலே உறுப்பினர்கள் பேரவைத் தலைவருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். நான் ஏற்கனவே பார்த்தேன், யாரும் என்னுடைய கண்களிலே படவில்லை. என்னுடைய கண்ணிலே பட்டிருந்தால் நிச்சயமாக வாய்ப்பு கொடுத்திருப்பேன். ஆகவே, இந்த விஷயத்தில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. (குறுக்கீடு) நான் பார்த்தேன். உங்களுக்குப் பின்னாலே அவர் இருக்கிறார். ஆக, அவர் கை தூக்கினாரா, இல்லையா என்று, உங்களுக்குத் தெரிந்ததை . . . .

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. The Speaker is very clear in his remarks that one should be in a position 9-30 to attract or catch the eye of the Speaker. But your eye is such an elusive one that it is not so easy to catch it. Will you permit us to catch your ear ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சட்டமன்றத்தில் பல ஆண்டுகளாக இருந்தவர். அவர்கள் கேட்கின்ற உரிமை நியாயம்தானா ? எல்லோரும் " ஸ்பீக்கர் " " ஸ்பீக்கர் " என்று சொல்லிக் கொண்டிருந்தால், இந்தச் சபை எப்படி நடைபெறும் ? அது நல்ல மரபுதானா ? ஒரு மரபை உருவாக்க வேண்டுமென்றால், அது நல்ல மரபுதானா என்பதை நினைத்துப் பார்த்துக் கேட்க வேண்டும். என்னுடைய கண் அப்படி ஒன்றும் குருடான கண் அல்ல.

THIRU K. VINAYAKAM : I only said that your eye is elusive.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய கண் நல்ல பார்வையோடுதான் இருந்துகொண்டிருக்கிறது. நான் சுற்றிச் சுற்றித்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நான் அப்படிப் பார்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல. அப்படியிருந்தால் என்னுடைய பார்வைக்கு இந்தக் கோடியிலிருக்கும் திரு. மார்ட்டின் அவர்களும் அந்தக் கோடியிலிருக்கும் திரு. ஆறுமுகம் அவர்களும் புலப்படமாட்டார்கள். நான் சுற்றிச் சுற்றித்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 297.

(துணைக் கேள்வி இல்லை.)

கிளிஞ்சல் எடுக்கும் குத்தகை

***298 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், மரக்காணம், கந்தாடு ஆகிய ஊர்களில் கிளிஞ்சல் எடுக்கும் குத்தகையை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை என்

றிருப்பதை வருவாயைப் பெருக்க ஓராண்டுக்கு ஒரு முறை என்று மாற்றும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை, ஐயா.

திரு. கொளத்தூர் கோதண்டம் : மேற்படி குத்தகையைக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக விடுவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது போன்ற குத்தகை விடுவது பற்றி, யாருக்கு எப்படி விடுவது என்றெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சில சலுகைகளெல்லாம் அந்த விதிமுறைகளில் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதை அவர்கள் கலெக்டர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

Parambikulam-Aliyar Project

*299 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU K. R. NALLASIVAM :
THIRU S. SIVASUBRAMANIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state:—

(*a*) whether the Government have negotiated with the Kerala Government regarding the sharing of water from the Parambikulam-Aliyar Project ; and

(*b*) if so, the results thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : ஆழியாறு நீரை உபயோகித்தல் பற்றியும் சாலக்குடி வடிநிலப்பகுதி நீரையும் சோலையாற்றின் நீரையும் பகிர்ந்து கொள்ளுதல் பற்றியும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. நீராறு, தேக்கடி, ஆனமலையாறு ஆகியவற்றின் நீரைப் பயன்படுத்தல் குறித்து இன்னும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

THIRU K. VINAYAKAM : This is a very delicate problem affecting two States and I will not embarrass the Government. What steps have been taken and what tangible results have been achieved ? Talks are being initiated. But is there any indication that we will get a due share of the water with the consent of the Kerala Government ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I am not in a position to disclose at present.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். கேரள அரசாங்கத்திற்கு, அந்த நீராறு தேக்கத்திலிருந்து கேரள மாநிலத்திலுள்ள நிலத்திற்கு நீர் பாய்ச்சுகின்ற உரிமை இருக்கிறதா அல்லது அதிலிருந்து மீன் பிடிக்கும் உரிமைகளெல்லாம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை விளக்கிச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி எல்லாம் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன. தற்சமயம் அதுபற்றி நான் சொல்வதற்கு இயலாத நிலைமையில் இருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.